

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு 47 நாட்கள் தொடர் நிகழ்ச்சிகள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஜெ.உமாமகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் மாவட்டக் கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் புல்லாரம்பாக்கம் கிராமத்தில் இரவு படிப்பகத்தை திறந்து வைத்து ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை தூய்மை பணியாளர்களுக்கு ரெயின் கோட், முதியோர்களுக்கு புடவை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன் , ஆர்.ஜெயசீலன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, டி.பிரியாகுமார், ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்வாணன், நிர்வாகிகள் விமலகுமார், பி.கே.இ.கபிலன், வே.தியாகராஜன், வழக்கறிஞர் பி.கே.இ.நாகராஜ், முகமதுராபி, கே.ஏ.அபினேஷ், சுமன், இளையராஜா, ராஜாராம், ராஜமோகன், ஜானபாபு, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் கோப்பை - 2024

# மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.15-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடத்தப்படும் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2024 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 10.09.2024 சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். மாவட்ட, மண்டல அளவில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் என மொத்தம் 11,56,566 நபர்கள் 36 வகையான விளையாட்டு போட்டிகளில், 168 பிரிவுகளில் கலந்து கொண்டனர்.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய நகரங்களில் அக்டோபர் 4ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை, மாவட்ட, மண்டல அளவில் வெற்றி பெற்ற 33,000 நபர்கள் பங்கு பெறும், மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை - 2024 போட்டிகள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 04.10.2024 சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் தொடங்கி வைக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்று வருகிறது.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் 12.10.2024 அன்று பதக்கம் பெற்றவர்களின் விபரங்கள் :-

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவர் (3000m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

சரவணன் - சேலம் - தங்கம், ஆகாஷ் - கோயம்புத்தூர் - வெள்ளி, இ. தமிழ் செல்வன் - காஞ்சிபுரம் - வெண்கலம்

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவியர் (1500m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

எல்.கௌசிகா - விருதுநகர் - தங்கம், வின்சியா எலிசபத் - காஞ்சிபுரம் - வெள்ளி, வி.மகாலட்சுமி - நாமக்கல் - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: கல்லூரி மாணவர் (3000m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

சதிஷ் குமார் - சென்னை - தங்கம், கே.வி. அஹில் ராம் - கன்னியாகுமரி - வெள்ளி, பிரகதீஸ்வரன் - தஞ்சாவூர் - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு : கல்லூரி மாணவியர் (1500m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

லாவண்யா - சென்னை - தங்கம், சௌந்தர்யா - மதுரை - வெள்ளி, சுவாதி - திருச்சிராப்பள்ளி - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவியர் (Shot Put4 kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

மெர்லின் ஹன்னாஸ் - சென்னை - தங்கம், கே. எஸ். அனுஶ்ரீ - ஈரோடு - வெள்ளி, ஷைனி நித்திலா - கோயம்புத்தூர் - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவர் (High jump) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

அசோக் குமார் - தேனி - தங்கம், பி.தீஸ்வா - சிவகங்கை - வெள்ளி, சக்திவேல் - திருநெல்வேலி - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: கல்லூரி மாணவியர் (100m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

எம்.ஏஞ்சல்சில்வியா - திருப்பூர் - தங்கம், எம். கௌசல்யா - கோயம்புத்தூர் - வெள்ளி, சுபதர்ஷினி - திருவள்ளூர் - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவர் (400m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

துளசிவேணு - சேலம் - தங்கம், எஸ்.தனுஷ் - சென்னை - வெள்ளி, யுவன் ஷரவன் - கோயம்புத்தூர் - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவியர் (100m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

தியா - கோயம்புத்தூர் - தங்கம், கே. மோனாஶ்ரீ - திருவண்ணாமலை - வெள்ளி, வி.பிரேமா - திருப்பூர் - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: கல்லூரி மாணவர் (100m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

முகமதியோன் - சென்னை - தங்கம், ஜெயக்குமார் - வேலூர் - வெள்ளி, பி. அரவிந்தன் - காஞ்சிபுரம் - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: கல்லூரி மாணவியர் (High jump) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

கோபிகா - சேலம் - தங்கம், வர்ஷா - சென்னை - வெள்ளி, கிரேசினா ஜி. மெர்லி - கன்னியாகுமரி - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவர் (100m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

ஜித்தின் அர்ஜுனா - திண்டுக்கல் - தங்கம், சக்திசரண் - கோயம்புத்தூர் - வெள்ளி, எஸ். ஹரிஷ் - சென்னை - வெண்கலம்.

விளையாட்டு: தடகளம் பிரிவு: பள்ளி மாணவியர் (400m) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

எட்வின் ஜேசன் - திருநெல்வேலி - தங்கம், நேத்ரா - சென்னை - வெள்ளி, சாத்விகா - பெரம்பலூர் - வெண்கலம்.

விளையாட்டு: ஜிம்னாஸ்டிக்ஸ், பிரிவு: Floor Exercise பள்ளி மாணவியர் இடம்: AGB Complex வேளச்சேரி.

ஆர்.தாமரை - ஈரோடு - தங்கம், ஆனந்தி மிஸ்ரா - சென்னை - வெள்ளி, எம். பிரியா -ஈரோடு - வெண்கலம்.

விளையாட்டு: கூடைப் பந்து பிரிவு: பள்ளி மாணவர் இடம்: VOC பூங்கா மைதானம், கோயம்புத்தூர்.

திருவள்ளூர் - தங்கம், சென்னை - வெள்ளி, கோயம்புத்தூர் - வெண்கலம்.

விளையாட்டு: கூடைப் பந்து பிரிவு: பள்ளி மாணவியர் இடம்: VOC பூங்கா மைதானம், கோயம்புத்தூர்.

கோயம்புத்தூர் - தங்கம், தூத்துக்குடி - வெள்ளி, சென்னை - வெண்கலம்.

விளையாட்டு: ஜுடோ பிரிவு: பள்ளி மாணவியர் (70kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

கே.கனிகா ஶ்ரீ - சென்னை - தங்கம், எஸ். பிரியா ஶ்ரீ - மதுரை - வெள்ளி, பி. தர்ஷினி - திருப்பூர் - வெண்கலம், இ. சஞ்சுஶ்ரீ - கோயம்புத்தூர் - வெண்கலம்.

விளையாட்டு: ஜுடோ பிரிவு: பள்ளி மாணவியர் (+70kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

சஹானா - திருப்பூர் - தங்கம், அக்க்ஷயா - கோயம்புத்தூர் - வெள்ளி, அர்ச்சனா - மதுரை - வெண்கலம், ஜனா ஶ்ரீ - மதுரை - வெண்கலம்.

விளையாட்டு: ஜுடோ பிரிவு: பள்ளி மாணவர் (66kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

பிரதீப் - திருவண்ணாமலை - தங்கம், வித்யுத் - சென்னை - வெள்ளி, ஆனந்தன் - சென்னை - வெண்கலம், முகமது ஆக்ஃப் - சென்னை - வெண்கலம்.

விளையாட்டு: ஜுடோ பிரிவு: பள்ளி மாணவர் (73kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

ஆண்டனி லார்ட்சன் - தங்கம், சர்ஜேஷ் ஷர்மா - வெள்ளி, யோகேஷ் ராம் - கரூர் - வெண்கலம், தீபக் - கிருஷ்ணகிரி - வெண்கலம்.

விளையாட்டு: ஜுடோ பிரிவு: பள்ளி மாணவியர் (63kg) இடம்: நேரு விளையாட்டரங்கம்.

பி. யாமினி - காஞ்சிபுரம் - தங்கம், ஏ.தாமரை செல்வி - தூத்துக்குடி - வெள்ளி, டி. தீபனா - கரூர் - வெண்கலம், எஸ்.காவியா - சென்னை - வெண்கலம்.

ம.ஜெயச்சந்திரன் தலைமை!

# விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி சிறப்புரை!

விழுப்புரம், அக்.15-

விழுப்புரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ம.ஜெயச்சந்திரன் தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் நடைபெற்றது. விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கூட்டத்தில் வருகிற 25 ஆம் தேதி வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி எழுதிய புத்தகத்தை சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் அவர்கள் வெளியிடுகிறார்.

அவ்விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வது, மகளிர் அணி உறுப்பினர்களை விரைந்து இணைப்பது, விரைவில் விழுப்புரம் மாவட்டத்திற்கு துணை முதலமைச்சரான பிறகு முதன் முதலில் வருகைதரும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது, 2026 சட்டமன்ற தேர்தல் பணிகளை இன்று முதலே தொடங்கி சிறப்பாக பணியாற்றுவது உள்ளிட்ட பல்வேறு கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில் நம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்ற முரசொலி செல்வம் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா. கற்பகம்,

திருக்கோவிலூர் தொகுதி மேற்பார்வையாளர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கோ.பாஸ்கரன், அப்துல் சலாம், பொதுக்குழு உறுப்பினர்கள் பஞ்சநான், டி.என்.ஜெ.சம்பத், காடுவெட்டி ஏழுமலை, ஆர்.இளங்கோ உள்ளிட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கனமழை எச்சரிக்கை

# கூடுதல் மெட்ரோ ரயில்கள் சேவையில் மாற்றம்!

சென்னை, அக்.15-

கனமழை அறிவிப்பு காரணமாக, கூடுதல் மெட்ரோ ரயில்கள் இயக்கம்.

கனமழை அறிவிப்பு காரணமாக, பயணிகளின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அக்டோபர் 15, 16 மற்றும் 17 ஆகிய நாட்களில் கூடுதல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னை வானிலை ஆய்வு மையம், சென்னையில் அக்டோபர் 15, 16 மற்றும் 17 ஆகிய மூன்று நாள்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுத்துள்ளதைத் தொடர்ந்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், கனமழை நேரத்தில் சென்னை மக்களுக்கு தடையற்ற போக்குவரத்தை அளிக்கும் வகையில் கூடுதலாக மெட்ரோ ரயில் சேவைகளை இயக்க திட்டமிட்டுள்ளது.

மெட்ரோ ரயில் சேவை: காலை 5 மணி முதல் இரவு 11 மணி வரை மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். (முதல் மெட்ரோ ரயில் அனைத்து முனையங்களிலிருந்தும் காலை 5 மணிக்குப் புறப்படும் மற்றும் கடைசி மெட்ரோ ரயில் அனைத்து முனையங்களிலிருந்தும் இரவு 11 மணிக்கு புறப்படும்).

காலை 8 மணி முதல் 11 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை:

பச்சை வழித்தடத்தில் புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ முதல் பரங்கிமலை மெட்ரோ வரை 5 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

நீல வழித்தடத்தில் விம்கோ நகர் பணிமனை மெட்ரோ முதல் விமான நிலையம் மெட்ரோ வரை 6 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

நீல வழித்தடத்தில் வண்ணாரப்பேட்டை மெட்ரோ முதல் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இடையே 3 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

காலை 5 மணி முதல் 8 மணி வரை மற்றும் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை மற்றும் இரவு 8மணி முதல் 10 மணி வரை: பச்சை வழித்தடம் மற்றும் நீல வழித்தடத்தில் 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்

இரவு 10 மணி முதல் 11 மணி வரை: பச்சை வழித்தடம் மற்றும் நீல வழித்தடத்தில் 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

கூடுதலாக மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுவதால், பச்சை வழித்தடத்தில் புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு, வடபழனி வழியாக விமான நிலையம் மெட்ரோவுக்கு நேரடியாக செல்லும் மெட்ரோ ரயில் சேவைகள் மேற்கண்ட நாள்களில் தற்காலிகமாக நிறுத்தப்படு கிறது.

பச்சை வழித்தடத்தில் இருந்து விமான நிலையத்திற்கு செல்லும் பயணிகள் அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோவில் மாறி விமான நிலையம் மெட்ரோவுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இருப்பினும், மேற்கூறிய அட்டவணைகள் அனைத்தும் வானிலை நிலையைப் பொறுத்து வழக்கமான சேவைக்கு மாற்றியமைக்கப்படும்.

முந்தைய அனுபவத்தின் படி, கனமழை காரணமாக தண்ணீர் தேங்கும் வாய்ப்புள்ள மெட்ரோ ரயில்நிலைய வாகன நிறுத்துமிடங்களில் (குறிப்பாக பரங்கிமலை மற்றும் அரும்பாக்கம் மெட்ரோ) பயணிகள் தங்கள் வாகனங்களை 15.10.2024 முதல் 17.10.2024 வரை நிறுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். (தேவைப்பட்டால் வானிலை நிலையைப் பொறுத்து தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்).



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் கழகத்தினர் மெழுகுவர்த்தி ஏற்றி, மலர் தூவி நினைவு அஞ்சலி செலுத்தினார்கள். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி.மூர்த்தி, எஸ்.பாலாஜி, என். நாகராஜன்,எஸ். சிவகுமார், கே.சண்முக பிரியன், டி.திவாகர், எம்.ஜான்சன், பூபாலன், விஜய் ஆனந்த்,எம். மைக்கேல், இ.கார்த்திக், கமலநாதன், ஏ.பாலகிருஷ்ணன், சுரேஷ், அப்துல்லா பாய் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில்

# மழை வெள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார்!

சென்னை,அக்.15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி மழை வெள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

எதிர் வருகின்ற வடகிழக்கு பருவ மழையின் காரணமாய் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படியும் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் உள்ள வார்டு எண் 76ல் அங்காளம்மன் கோயில் தெருவில் பொருத்தப்பட்டுள்ள 100 எச்.பி மோட்டார் மற்றும் பெரம்பூர் பேரக்ஸ் ரோட்டில் பொருத்தப்பட்டுள்ள 100எச்.பி மோட்டார்கள் ஆய்வு செய்தும், வார்டு எண் 73ல் டிகாஸ்டர் ரோடு, நாராயணசாமி தெரு சந்திப்பில் பொருத்தப்பட்டுள்ள 100எச்.பி மோட்டார் ஆய்வு செய்தும், வார்டு எண் 71ல் பெரம்பூர் சுரங்கப்பாதையில் பொருத்தப்பட்டுள்ள 35எச்.பி, 25எச்.பி, 10எச்.பி மோட்டார் ஆய்வு செய்தும், வார்டு எண்: 73ல் உள்ள ஸ்டீபன் சாலை மேம்பாலம் நிலத்தடி தொட்டியில் பொருத்தப்பட்டுள்ள 120எச்.பி, 90எச்.பி மோட்டார் ஆய்வு செய்யப்பட்டும், வார்டு எண் 74ல் கிருஷ்ணதாஸ் சாலையில் பொருத்தப்பட்டுள்ள 20எச்.பி டிராக்டர் மோட்டார் ஆய்வு மேற்கொள்ளப்பட்டும், அதைப்போலவே ஏகாங்கிபுரம் கால்வாயில் தூர்வாரும் பணியினை மேற்கொண்டும், அப்பகுதயில் பொருத்தப்பட்டுள்ள 5எச்.பி மோட்டார் ஆய்வு செய்தும் வார்டு எண் 75ல் ஏ.கே. சாமி தெரு, செக்ரேடரியேட் காலனியில் பொருத்தப்பட்டுள்ள 10எச்.பி மோட்டார் ஆய்வு செய்யும் பணியினை கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி பார்வையிட்டு மழை வெள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து மழை வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டு பொதுமக்கள் தங்குவதற்கு வசதியாக வார்டு எண் 73ல் டிகாஸ்டர் ரோட்டில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளி, வார்டு எண் : 71ல் எம்.எச் சாலை சென்னை மாநகராட்சி பள்ளிகளில் அமைந்துள்ள நிவாரண மையங்களையும், வார்டு எண் 71ல் எம்.எச். சாலை சென்னை மாநகராட்சி பள்ளியில் அமைந்துள்ள உணவு தயாரிக்கும் கூடத்தையும் திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி,எம்.எல்.ஏ.பார்வையிட்டு நடைபெற்றுவரும் பணிகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வு பணியின் போது சட்டமன்ற உறுப்பினருடன் மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி எத்திராசன், தமிழ்செல்வி சசிகுமார், மு.சரவணன் , விடுதலை சிறுத்தைகள் கட்சி மாமன்ற உறுப்பினர் அம்பேத்வளவன், மற்றும் வட்ட கழக செயலாளர்கள் தமீம், பொல்லு சுரேஷ், வெங்கடேசன், சசிகுமார், புஷ்பராஜ், கிருஷ்ணகுமார், வி.க.வெங்கடேசன், பரிமளாசுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டிக்கா,எம். இசட்.அபோய், கழக நிர்வாகிகள் பெரம்பூர் ஆர். ராஜன், தில்லை கதிரவன், புல்லட் ரமேஷ், நாகலிங்கம், சத்யா நாகலிங்கம், K.M.கார்டன் ஜான், மாதவன், ஜெயபாலன், மால்கம், ஜெகதீஷ், நிறைமொழி, மெடிக்கல் வினோத், அண்ணாதுரை, பாலாஜி, ஜமுனா, வினோத், ஜெகன், ஸ்வீட் பாபு, ராமமூர்த்தி, உஷா, பன்னீர், சஞ்சீவ், தா.வே. ஏகாம்பரம், சு.பிரகாசம், விநாயகம், வீரபத்திரன், ரவி, யு.பாபு, கௌதம், சுரேன், சங்கர்,

மற்றும் தலைமை பொறியாளர் சரவணன், உதவி பொறியாளர் ஜெயராமன், மாதவன், சங்கர், ஹரி பாபு, உதவி பொறியாளர் ரேவதி, சரஸ்வதி, அமல்ராஜ், ராஜா, ஜெரால்டு மற்றும் மண்டலம் - 6 அதிகாரிகள் ஆகியோர் களப்பணியின் போது உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும் துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி மழை வெள்ள முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டார்.